**தலைப்பு 252 – தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 252 – தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 23 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.1 |
| | | 2. | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை. | 2.4 |
| | | 3. | ஏதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடையப்பெறாமை. | 2.1 |
| | | 4. | எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளாமை. | 2.1 |
| | | 5. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1. இணக்கமின்மைகள்<br>2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.7<br>2.8 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள். | 2.5 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளை களுக்கும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும் | குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 செயலாற்றல்

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 6 பிரதான

பணிகளின் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டம் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட வேண்டிய போதிலும், செயற்பாடுகளுக்காக பாதீட்டு மதிப்பீடுகள் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) செயலாற்றல் குறிகாட்டிகளை தீர்மானிக்கும் போது குறிப்பாக எதிர்பார்க்கப்பட்ட விளைவினை அளவிடக்கூடிய முறையில் குறிகாட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் காரணமாக பெரும்பாலான பிரதான பணிகளின் எதிர்பார்க்கப்பட்ட விளைவினை அடைந்து கொள்ளல் தொடர்பில் குறிப்பாக கருத்தொன்றினை முன்வைக்க முடியாதிருந்தது.

(இ) 15 பணிகளுக்குரிய மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 37.77 மில்லியனாக இருந்ததுடன், சேமிப்பானது ரூபா 28.75 மில்லியன் ஆகும். குறித்த சேமிப்புகள் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய பாதீட்டு மதிப்பீட்டு நிதியேற்பாடுகளினை உரிய பணிகளில் ஈடுபடுத்துவதில் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) பதவியணியினர் பயிற்சிகளுக்காக ரூபா 9 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பதவியணியினர் பயிற்சிகளுக்காக ரூபா 8.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. திணைக்கள ஊழியர்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களை மேம்படுத்தும் கொள்கைக்கமைய 9 பிரதான செயற்பாடுகளின் கீழ் ரூபா 4.06 மில்லியனுக்கு உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தது. செயலாற்றல் குறிகாட்டிகளுக்கமைய ரூபா 1.115 மில்லியனான மதிப்பீட்டு செயற்பாடுகள் மூன்றின் உரிய செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை (Outcome) அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

## 2.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2017 மே 05 ஆந் திகதி அவசர விபத்திற்குள்ளாகிய ரூபா 5.3 மில்லியன் பெறுமதியான டபள் கெப் வண்டி முழுமையான சேதமடைந்திருந்தது. எவ்வாறெனினும், அந்த வாகன விபத்திற்குரிய முழுமையான காப்பீடானது 2018 செப்தெம்பர் 30 வரையிலும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் கெப் வண்டியொன்று 2014 சனவரி 11 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், இந்த ரக வாகனத்தின் பிரதிநிதித்துவ நிறுவனத்தினால் 2014 மே 29 ஆந் திகதி இந்த வாகனத்தை பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமற்றது என்பதால் ஓட்டத்திலிருந்து அகற்றுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இந்த வாகனம் தனியார் வாகனம் திருத்தப்படுமிடமொன்றினால் 2015 ஒக்தோபர் 13 ஆந் திகதி பழுதுபார்த்தல் நிறைவு செய்யப்பட்டு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,514,625 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், வாகனத்தின் இயக்கம் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாதென 2015 திசெம்பர் 14 ஆந் திகதி மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் அறிக்கையிட்டிருந்தார். 2016 செப்தெம்பர் 22 ஆந் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் இந்த வாகனத்தின் ஓட்ட நிலைமை தொடர்பில் ஆராய்ந்திருந்ததுடன், ஓட்டத்திற்கு பொருத்தமற்றதென குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வாகனத்தை பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதல்ல என குறிப்பிடப்பட்டுள்ள போதும் மோட்டார் போக்குவரத்து

திணைக்களத்தில் வாகனத்தின் ஓட்ட நிலைமை தொடர்பில் ஆராயாது ஆக்கபூர்வமற்ற பணியொன்றுக்காக காப்புறுதி நட்டஈட்டினை ஈடுபடுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. வாகன விபத்து ஏற்பட்டு 3 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அறிக்கைத் திகதி வரையிலும் இந்த வாகனத்தின் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 637.50 | 632.40 | 5.10 | 1 |
| | மூலதனம் | 1,012.97 | 996.11 | 16.86 | 2 |
| | மொத்தம் | 1,650.47 | 1,628.51 | 21.96 | 1 |
| **2014** | மீண்டுவருபவை | 683.90 | 673.17 | 10.73 | 2 |
| | மூலதனம் | 1,310.89 | 1,284.89 | 26.00 | 2 |
| | மொத்தம் | 1,994.79 | 1,958.06 | 36.77 | 2 |
| **2015** | மீண்டுவருபவை | 812.25 | 805.38 | 6.87 | 1 |
| | மூலதனம் | 474.99 | 230.66 | 244.33 | 51 |
| | மொத்தம் | 1,287.24 | 1,036.04 | 251.20 | 20 |
| **2016** | மீண்டுவருபவை | 857.98 | 838.28 | 19.70 | 2 |
| | மூலதனம் | 276.76 | 249.63 | 27.13 | 10 |
| | மொத்தம் | 1,134.74 | 1,087.91 | 46.83 | 4 |
| **2017** | மீண்டுவருபவை | 942.05 | 851.03 | 91.02 | 10 |
| | மூலதனம் | 185.16 | 130.10 | 55.06 | 30 |
| | மொத்தம் | 1,127.21 | 981.13 | 146.08 | 13 |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலதன செலவின விடயங்கள் இரண்டின் ரூபா 14.53 மில்லியன் நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாது, முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) மூன்று மூலதன விடயங்களுக்காக குறைநிரப்பு நிதியேற்பாடுகளினூடாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 24,958,952 தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 15,252,663 தொகையான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அது தேறிய நிதியேற்பாட்டில் 55 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) மூலதன செலவின விடயங்கள் மூன்றின் ரூபா 49.12 மில்லியனான தேறிய நிதியேற்பாடுகளிலான சேமிப்பு ரூபா 21.32 மில்லியனாக இருந்ததுடன், நான்கு மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 59.40 மில்லியனான தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 16.14 மில்லியனாகும். அந்த சேமிப்பானது தேறிய நிதியேற்பாடுகளில் 27 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சுடையதாகும்.

### 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 25201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 48.00 | 29.79 | 30.00 | 36.30 | 240.00 | 128.59 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் சேவையைக் கைவிட்டுச் சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 588,116 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. கடன் மீதியினுள் 4-5 வருடங்களுக்கிடைப்பட்ட ரூபா 70,750 தொகையும் 5 வருடங்களை விஞ்சிய ரூபா 340,846 கூட்டுத்தொகையான கடன் மீதியினை அறவிட முடியாதிருந்தது. இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 77,150 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்று தீர்க்கப்படாது 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது.

### 2.6 பொது வைப்புக் கணக்கு

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 6.54 மில்லியன் கூட்டுத்தொகையான 09 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 30 ஆந் திகதிய அரச நிதிக் கொள்கைச் சுற்றறிக்கை 01/2015/(04)(இ) ஆம் இலக்கத்தின் பிரகாரம் சேகரிக்கப்படும் வருமானங்கள் சேகரித்தல் கணக்குகளில் வைத்திருக்காது ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வைப்புக் கணக்கில் மீதியொன்று காணப்படுமாயின், ஆரம்பிக்கும் மாதத்தின் முதலாவது வாரத்தினுள் அந்தந்த வருமான விடயத்தின் கீழ் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அதற்கு முரணாக ஒரு வருட காலமாக சேகரிக்கப்பட்ட ரூபா 8.74 மில்லியன் வைப்புக் கணக்கில் 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் காணப்பட்டது.

**2.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

கணக்காய்வுத் தெரிவு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பமொன்று பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட 10 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(3) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆரம்ப அறிக்கையானது 10 நாட்கள் முதல் 106 நாட்களுக்கிடையிலான கால வீச்சிலான தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 06 வாகன விபத்துக்கள் தொடர்பில் உரிய காலப்பகுதியினுள் முழுமையான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

**2.9 மனிதவள முகாமைத்துவம்**

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 671 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய வருடாந்த நபரொருவருக்கான செலவினம் ரூபா 521,848 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 319 | 161 | 121 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 530 | 332 | 198 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 799 | 650 | 127 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 174 | 141 | 33 |
| (v) | ஏனைய/அமைய /தற்காலிக | | | |
| | சாரதி (அமைய) | 03 | 02 | 01 |
| | அலுவலக ஊழியர் | 03 | - | 03 |
| | **மொத்தம்** | 1828 | 1286 | 483 |

- சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 37 சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர் பதவிகள் அந்த பதவிகளை வகிப்போருக்கு தனிப்பட்டதாகவும் பின்னர் இரத்துச் செய்யப்படும் வரையிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் வெற்றிடங்கள் இல்லையென கருதப்பட்டுள்ளது.

- இரண்டாம் நிலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் அங்கீகரிக்கப்பட்ட உதவி புள்ளவிபரவியலாளர் பதவிகள் 202 ஆகக் காணப்பட்டது. உள்ளபடியான பதவியணியினர் 185 ஆகும். அதற்கமைய 17 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அந்த பதவிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உள்ளீர்க்கப்படுவதன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால், வெற்றிடங்கள் இல்லையென கருதப்பட்டிருந்தது. மேலும், இரு கட்டமைப்பு கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்று சிரேஷ்ட கட்டமைப்பு கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அந்த பதவிகள் வகிப்பவர்களுக்கு தனிப்பட்டதாகும் வகையிலும், பின்னர் அந்த பதவிகள் இரத்தாகும் வகையிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் வெற்றிடங்கள் இல்லையென கருதப்பட்டுள்ளது.

**2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்**

திணைக்களத்தின் கடமையில் ஈடுபட்டுள்ள பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 880(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.